Special Service and Features

CSIR-Structural Engineering Research Centre's Diamond Jubilee Celebrations to be held tomorrow

Posted On: 09 JUN 2025 5:21PM by PIB Chennai

The Diamond Jubilee celebrations of CSIR-Structural Engineering Research Centre (SERC) to be held on tomorrow (10.06.2025). A curtain raiser press conference was held today at the CSIR campus in Taramani, Chennai.

Dr. N. Anandavalli, Director of CSIR-SERC, addressed the gathering and explained about the 60th-anniversary Diamond Jubilee celebrations to be held tomorrow. She highlighted the achievements and social contributions of the CSIR-Structural Engineering Research Centre over the last six decades. She also quoted how their research is structured to apply science in a way that benefits society.

She further said that their achievements, including the invention and production of twisted steel bars, design checking of the Matri mandir in Puducherry, fly ash technology, Tower Testing Station, CSIR-SERC's contribution to the design of the New Pamban Bridge, and the Structural Engineering Research Centre's contributions to various sectors including the Railway, Defence, Science and environment and Interdisciplinary researches.

She informed that CSIR-SERC will be handling the structural health monitoring of the Chenab Bridge, which was inaugurated in Jammu and Kashmir recently by the Prime Minister Shri Narendra Modi. The CSIR-SERC address the design issues and condition assessment of concrete quality for various metro rail projects such as Delhi Metro, Jaipur Metro etc. Dr. N. Anandavalli also stated that, various programmes including stakeholder connect, Diamond Jubilee celebrations, release of coffee table book and 60 technologies of CSIR-SERC, display of exhibits, honouring of retirees etc will be organised during the event tomorrow.

Furthermore, Professor Kamachi Mudali, Vice-Chancellor of Homi Bhabha National Institute, Mumbai, and Dr. Ramji Singh, member of the Dam Safety Review Committee of the Government of Gujarat, will participate as special guests at the diamond jubilee celebrations tomorrow.

***

AD/NB/RR/KR

(Release ID: 2135159)
Read this release in: Tamil

சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் வைர விழா கொண்டாட்டங்கள் நாளை நடைபெற உள்ளன

Posted On: 09 JUN 2025 5:21PM by PIB Chennai

சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் வைர விழா கொண்டாட்டங்கள் நாளை நடைபெற உள்ளன. இது குறித்த செய்தியாளர் சந்திப்பு சென்னை தரமணியில் உள்ள சிஎஸ்ஐஆர் வளாகத்தில் இன்று (09/06/2025) நடைபெற்றது.

இதில் உரையாற்றிய சிஎஸ்ஐஆர்-கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் டாக்டர் என். ஆனந்தவல்லி, நாளை நடைபெறவுள்ள 60-வது ஆண்டு வைர விழா கொண்டாட்டங்கள் குறித்து விளக்கினார். கடந்த 60 ஆண்டு கால கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் சாதனைகள் மற்றும் சமூக பங்களிப்பு குறித்து அவர் எடுத்துரைத்தார். அறிவியல் கண்டுபிடிப்புகள் சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் தங்களது ஆராய்ச்சிகள் அமைந்துள்ளன என்று அவர் கூறினார்.

தங்களது சாதனைகளான முறுக்கு கம்பி கண்டுபிடிப்பு மற்றும் தயாரிப்பு, புதுவையில் உள்ள மாத்ரிமந்திர் உருவாக்கம், உலைச் சாம்பல் தொழில்நுட்பம், புதிய பாம்பன் ரயில் பால வடிவமைப்பில் தங்களது பங்களிப்பு, மேலும் ரயில்வே துறை, பாதுகாப்பு துறை, அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் பங்களிப்பு குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

சமீபத்தில் ஜம்மு காஷ்மீரில் பிரதமர் நரேந்திர மோடியால் திறக்கப்பட்ட செனாப் ரயில்வே வளைவு பாலத்தின் கட்டமைப்பு வலிமையை ஆய்வு செய்யும் என்றும் அவர் கூறினார். நாளை நடைபெற உள்ள நிகழ்ச்சியில் இரண்டு புதிய பயிற்சி திட்டங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும் இயக்குநர் டாக்டர் என். ஆனந்தவல்லி கூறினார்.

மேலும் நாளை நடைபெறும் விழாவில் மும்பையில் உள்ள ஹோமி பாபா தேசிய நிறுவனத்தின் துணை வேந்தர் பேராசிரியர் காமாட்சி முதலி மற்றும் குஜராத் அரசின் அணை பாதுகாப்பு ஆய்வுக்குழு உறுப்பினர், டாக்டர் ராம்ஜி சிங் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

***

AD/RR/KR

(Release ID: 2135162)
Read this release in: English

காஷ்மீரில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தை பராமரிக்க உள்ள சிஎஸ்ஐஆர் ஆய்வு மையம்! - CSIR RESEARCH CENTER

கலவையில் ஸ்டீல் பைபர் கலக்கப்பட்டு புதிய தொழில்நுட்பரீதியில் 20 நாட்களில் புதிய கட்டடத்தை சிஎஸ்ஐஆர் ஆய்வு மையம் அமைத்துள்ளது.

சிஎஸ்ஐஆர் ஆய்வு மையத்தின் இயக்குநர் ஆனந்தவல்லி (ETV Bharat Tamil Nadu)

சென்னை: ஜம்மு காஷ்மீரில் கட்டப்பட்ட புதிய பாலத்தை பராமரிப்புக்காக ரயில்வே துறையிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள இருப்பதாக சிஎஸ்ஐஆர் ஆய்வு மையத்தின் இயக்குநர் ஆனந்தவல்லி தெரிவித்துள்ளார்.

சென்னை தரமணியில் உள்ள சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் ஆனந்தவல்லி செய்தியாளர்களை இன்று சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், "சிஎஸ்ஐஆர் ஆராய்ச்சி நிறுவனம் துவங்கி 60 ஆண்டு வைர விழா நாளை நடைபெற இருக்கிறது. இதில் தொழிலதிபர்கள், அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துக் கொள்ள உள்ளனர்.

சிஎஸ்ஐஆர் ஆராய்ச்சி மையம் தொடங்கி 60 ஆண்டுகளில் பல்வேறு கண்டுபிடிப்புகளை மேற்கொண்டுள்ளது. டிஎம்டி முறுக்கு கம்பி முதன் முதலில் இந்த மையத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. நில அதிர்வை தாங்கும் வகையிலும், நில அரிப்பு தன்மையை தடுக்கும் வகையிலும், கட்டடங்கள் கட்டுவதற்காக மத்திய, மாநில அரசுகளுக்கு இந்த ஆராய்ச்சி மையம் உரிய ஆலோசனை வழங்கி வருகிறது.

ராமேஸ்வரத்தில் புதிதாக கட்டப்பட்ட பாம்பன் பாலம் கட்டுமான பணிக்கு உரிய கான்கிரீட் தொடர்பாக ஆலோசனைகள் இங்கிருந்து வழங்கப்பட்டதன் அடிப்படையில் அந்த பாலம் கட்டப்பட்டுள்ளது.

இதே போல கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் இந்தியாவிலே மிக உயரமான ரயில்வே பாலம் பிரதமரால் திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பாலத்தின் கட்டுமானப் பராமரிப்பை மேற்கொள்வதற்காக, ரயில்வே துறையிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட உள்ளது.

இதையும் படிங்க: தவெகவில் இணைந்த ஜேப்பியார் மருமகன்! முன்னாள் ஐஆர்எஸ் அதிகாரி அருண்ராஜுக்கு முக்கிய பொறுப்பு!

தற்போது புதிய நாடாளுமன்றம் கட்டிடத்திற்கும், கட்டுமானத்திற்கும் சில ஆலோசனைகளை வழங்கி இருக்கிறோம். மேலும் தற்பொழுதைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு போல் 3டி தொழில்நுட்பத்தின் கான்கிரீட் பயன்படுத்தி கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கட்டட கலவையில் ஸ்டீல் பைபர் கலக்கப்பட்டு புதிய தொழில்நுட்ப ரீதியில் 20 நாட்களில் இந்த புதிய கட்டடத்தை உருவாக்கி உள்ளோம். இதனால் கட்டடம் கட்டும் நாட்களும் குறைவாக இருக்கும். அதற்கு தேவையான மூலப்பொருட்களும் குறைவாக இருக்கும். இந்த கட்டடம் மழை, வெயில் காலங்களில் அதற்கு ஏற்றவாறு போல தட்பவெப்ப நிலை மாற்றி அமைத்துக் கொள்ளும்" என தெரிவித்தார்.

CSIR-SERC To Maintain World's Highest Railway Bridge In Jammu Kashmir: Director Anandavalli

She said a MoU is to be signed with the Railways to undertake the maintenance of the highest railway bridge.

CSIR-SERC To Maintain World's Highest Railway Bridge In Jammu Kashmir: Director Anandavalli (ETV Bharat)

Chennai: CSIR-Structural Engineering Research Centre (SERC) Director N. Anandavalli has said that a memorandum of understanding (MoU) will be signed with the Indian Railways for the maintenance of the Chenab Bridge in Jammu and Kashmir, which is the highest bridge in the world and was inaugurated by Prime Minister Narendra Modi on Friday.

“A MoU is to be signed with the Railways to undertake the maintenance of the highest railway bridge,” she said. "We are also providing suggestions for the construction of the new Parliament building."

Anandavalli said that the buildings of the Parliament had been constructed using 3D technology and concrete as of current times. "We have constructed a new building in 20 days using new technology by mixing silver and fibre in the building mix,” she said.

“Due to our intervention, the days for constructing the building will be fewer. The raw materials required for it will also be less. This building will adjust to the climatic conditions in the rainy and hot seasons as per the prevailing weather conditions,” she said.

Anandavalli was addressing a special press meet on the eve of the 60th foundation day of the CSIR-SERC. Several people, including industrialists, scientific researchers, scientists, students, etc., are expected to participate in the celebrations.

“The CSIR research centre has made various discoveries in the 60 years since its inception. The TMT bar was first invented at this centre. This research centre provides appropriate advice to the central and state governments for constructing buildings that can withstand earthquakes and prevent soil erosion. The newly constructed Pamban Bridge in Rameswaram was built based on advice provided here regarding the appropriate concrete for the construction work,” she said.

இரவு 07.00 மணி DD தமிழ் செய்திகள்

சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் வைரவிழா காண்கிறது

June 10, 2025, 12:08 am

SHARE 0

சென்னை:

சென்னை தரமணியில் இயங்கி வரும் சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் எஸ்இஆர்சி இன்று வைரவிழாவை கொண்டாடுகிறது. இதுதொடர்பாக அந்நிறுவனத்தின் இயக்குநர் ஆனந்தவல்லி செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: கடந்த 1965ம் ஆண்டு ஜூன் 10ம் தேதி தொடங்கப்பட்ட சிஎஸ்ஐஆர் எஸ்இஆர்சி நிறுவனம் 60வது ஆண்டு விழாவை கொண்டாடுகிறது. கட்டமைப்பு பொறியியல் துறையில் இங்கு ஆராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துறையில் புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கட்டுமான துறையில் முக்கிய பங்கு வகிக்கும் முறுக்கு கம்பி நாங்கள் உருவாக்கியதுதான் என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்கிறோம்.

கட்டமைப்பு துறையில் புதுமைகளை கண்டறிவதுடன் பாரம்பரிய கட்டிடங்களை பராமரிப்புக்கான புதிய தொழில்நுட்பங்களையும் உருவாக்கி வருகிறோம். பாதுகாப்புத்துறை, அணுசக்தித்துறை, ரயில்வே, காற்றாலை, சூரிய ஒளி மின்சாரம் உள்ளிட்ட மரபுசாரா எரிசக்தித்துறை என பல்வேறு துறைகளில் எங்கள் நிறுவனத்தின் பெரும் பங்களிப்பு உள்ளது. முப்பரிமாண அச்சு (2டி பிரிண்டிங்) பயோ-இன்ஜினியரிங், பழைய கட்டிடங்களை மறுசுழற்ச்சி மூலம் பயன்படுத்தும் தொழில்நுட்பம் என பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

ராமேஸ்வரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள் பாம்பன் செங்குத்து தூக்கு ரயில் மேம்பால கட்டுமான பணியில் எங்கள் விஞ்ஞானிகளும் பங்காற்றியுள்ளனர். தண்டவாளத்தை சென்சார் முறையில் கண்காணிக்க ஆலோசனை வழங்கி உள்ளனர். அண்மையில் காஷ்மீரில் பிரதமர் திறந்துவைத்த உலகின் மிக உயரமான செனாப் ரயில் பாலத்தின் உறுதித்தன்மையை கண்காணிக்கும் பணியை எங்கள் நிறுவனத்திடம் ஒப்படைக்க ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் இதுதொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. எங்கள் நிறுவனத்தின் வைரவிழா செவ்வாய்க்கிழமை (இன்று) கொண்டாடப்படுகிறது. சாதனைகளை எடுத்துரைக்கும் வண்ணம் சிறப்பு அறிவியல் தொழில்நுட்பக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இவ்விழாவில், மும்பை ஹோமி பாபா தேசிய நிறுவனத்தின் துணைவேந்தர் யு. காமாட்சி முதலி, குஜராத் மாநில அரசின் அணை பாதுகாப்பு மறுஆய்வு குழு உறுப்பினர் ராம்ஜி சிங் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர். வைரவிழாவின் முக்கிய அம்சமாக முன்னாள் இயக்குநர்கள் நினைவாக இரண்டு இண்டர்ன்ஷிப் திட்டங்கள் தொடங்கப்படுகின்றன. மேலும் 3-டி பிரிண்டிங் தொழில்நுட்பத்தில் நாங்கள் கட்டியுள்ள மாதிரி கட்டிடமும் திறந்துவைக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது தலைமை விஞ்ஞானிகள் பாரி வள்ளல், சதீஷ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் வைரவிழா

ADDED : ஜூன் 10, 2025 12:38 AM

FOLLOW ON Google News
Share Focus

You May Like
Sponsored Links by Tabo
Sanitize & Smooth Clothes Fast with Philips Steamer(Philips Garment Steamers)
Help elder forgotten fathers today(HelpAge India)

நிறம் மற்றும் எழுத்துரு அளவு மாற்ற

சென்னை, கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் வைரவிழா, இன்று நடக்கிறது.

சென்னை, தரமணி, சி.எஸ்.ஐ.ஆர்., வளாகத்தில், 37 துணை நிறுவனங்கள் உள்ளன. இதில், எஸ்.இ.ஆர்.சி., என்ற கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி மையம், 1965ல் துவக்கப்பட்டது. இதன், 60வது ஆண்டு வைர விழா, இன்று நடைபெற உள்ளது.

இதுகுறித்து, கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி மைய இயக்குனர் ஆனந்தவள்ளி கூறியதாவது:

இந்தியாவில் உள்ள பல கட்டுமானங்களுக்கு, இந்த நிறுவனம் உறுதுணையாக இருந்துள்ளது. கட்டுமானத்துக்கு பயன்படுத்தப்படும் முறுக்கு கம்பியை உருவாக்கியது உள்ளிட்ட பல புதுமைகளை படைத்துள்ளோம்.

பாரம்பரிய கட்டடங்களின் உறுதிதன்மை, பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்களை ஆராய்ந்து வருகிறோம். அறிவியல் வளர்ச்சி காரணமாக, தற்போது புதுமையான வடிவமைப்புகள் கொண்ட கட்டுமானங்களை உருவாக்க பல்வேறு வகைகளில் ஆராய்ச்சி செய்து வருகிறோம். குறைந்த காலத்தில் அதிக உறுதி தன்மை கொண்ட கட்டடங்களை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறோம். வைர விழாவை ஒட்டி 3டியில் உருவாக்கிய கட்டடம் திறக்கப்பட உள்ளது. புதுமையான கட்டுமானங்கள் தொடர்பான ஆய்வு நூல்கள் வெளியிட உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி மைய முதன்மை விஞ்ஞானிகள் பாரிவள்ளல், சதீஷ்குமார், சப்தரிஷி சஸ்மால், பி.ஐ.பி., இயக்குனர் அருண் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

Press Information Bureau
Government of India
Chennai

Title of the story/Report	CSIR-SERC to maintain World's Highest Railway Bridge in Jammu Kashmir: Director Anandavalli
Name of the Daily	Dinamani
Date	10 June 2025
Language of Publication	Tamil

காஷ்மீர் புதிய பாலம் பராமரிப்புக்காக ரயில்வே துறையுடன் ஒப்பந்தம்

சிஎஸ்ஐஆர் மைய இயக்குநர் தகவல்

சென்னை, ஜூன் 9: ஜம்மு காஷ்மீரில் கட்டப்பட்ட புதிய பாலத்தின் பராமரிப்புக்காக ரயில்வே துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள இருப்பதாக சிஎஸ்ஐஆர் ஆய்வு மைய இயக்குநர் ஆனந்தவல்லி தெரிவித்தார்.

சென்னை தரமணியிலுள்ள சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தில், அதன் இயக்குநர் ஆனந்தவல்லி திங்கள்கிழமை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

சிஎஸ்ஐஆர் ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கி 60-ஆவது ஆண்டு வைர விழா செவ்வாய்க்கிழமை (ஜூன் 10) நடைபெறவுள்ளது. இதில் சிறப்பாக பணியாற்றிய விஞ்ஞானிகளுக்கு விருது வழங்கப்படவுள்ளது.

நில அதிர்வை தாங்கும் வகையிலும், நில அரிப்பை தடுக்கும் வகையிலும், கட்டடங்கள் கட்டுவதற்காக மத்திய, மாநில அரசுகளுக்கு ஆராய்ச்சி மையம் மூலம் உரிய ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. இதுமட்டுமன்றி சிஎஸ்ஐஆர் ஆராய்ச்சி மையத்தின் ஆலோசனையின் படியே ராமேஸ்சுவரத்தில் புதிதாக பாம்பன் பாலம் கட்டப்பட்டுள்ளது.

இதேபோல, சமீபத்தில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்ட மிக உயரமான பாலத்தின் பராமரிப்புப் பணியை மேற்கொள்வதற்காக ரயில்வே துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்படவுள்ளது. மேலும், புதிய நாடாளுமன்றம் கட்டடத்தின் கட்டுமானம் தொடர்பாகவும் சில ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்றைய காலகட்டத்துக்கு ஏற்றவாறு, 3-டி தொழில்நுட்பத்தில் கான்கிரீட் பயன்படுத்தி கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. குறைவான மூலப்பொருள்களில் சில்வர் மற்றும் பைபர் கலவையில் கட்டப்பட்ட இப்புதிய கட்டடம் கட்டும் நாள்களும் குறைவாக இருக்கும். இக்கட்டடம் மழை, வெயில் காலங்களில் அதற்கு ஏற்ப தட்பவெப்ப நிலையை மாற்றி அமைத்துக் கொள்ளும் என்றார் அவர்.

சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் வைரவிழா காண்கிறது

சென்னை, ஜூன் 10: சென்னை தரமணியில் இயங்கி வரும் சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் எஸ்இஆர்சி இன்று வைரவிழாவை கொண்டாடுகிறது.

இதுதொடர்பாக அந்நிறுவனத்தின் இயக்குநர் ஆனந்தவல்லி செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

கடந்த 1965ம் ஆண்டு ஜூன் 10ம் தேதி தொடங்கப்பட்ட சிஎஸ்ஐஆர் எஸ்இஆர்சி நிறுவனம் 60வது ஆண்டு விழாவை கொண்டாடுகிறது. கட்டமைப்பு பொறியியல் துறையில் இங்கு ஆராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துறையில் புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கட்டுமான துறையில் முக்கிய பங்கு வகிக்கும் முறுக்கு கம்பி நாங்கள் உருவாக்கியதுதான் என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்கிறோம். கட்டமைப்புதுறையில் புதுமைகளை கண்டறிவதுடன் பாரம்பரிய கட்டிடங்களை பராமரிப்புக்கான புதிய தொழில்நுட்பங்களையும் உருவாக்கி வருகிறோம். பாதுகாப்புத்துறை, அணுசக்தித்துறை, ரயில்வே, காற்றாலை, சூரிய ஒளி மின்சாரம் உள்ளிட்ட மரபுசாரா எரிசக்தித்துறை என பல்வேறு துறைகளில் எங்கள் நிறுவனத்தின் பெரும் பங்களிப்பு உள்ளது.

முப்பரிமாண அச்சு (2டி பிரிண்டிங்) பயோ-இன்ஜினியரிங், பழைய கட்டிடங்களை மறுசுழற்சி மூலம் பயன்படுத்தும் தொழில்நுட்பம் என பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. ராமேஸ்வரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள் பாம்பன் செங்குத்துதூக்கு ரயில் மேம்பால கட்டுமான பணியில் எங்கள் விஞ்ஞானிகளும் பங்காற்றியுள்ளனர். தண்டவாளத்தை சென்சார் முறையில் கண்காணிக்க ஆலோசனை வழங்கி உள்ளனர். அண்மையில் காஷ்மீரில் பிரதமர் திறந்துவைத்த உலகின் மிக உயரமான செனாப் ரயில் பாலத்தின் உறுதித் தன்மையை கண்காணிக்கும் பணியை எங்கள் நிறுவனத்திடம் ஒப்படைக்க ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் இதுதொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

எங்கள் நிறுவனத்தின் வைரவிழா செவ்வாய்க்கிழமை (இன்று) கொண்டாடப்படுகிறது. சாதனைகளை எடுத்துரைக்கும் வண்ணம் சிறப்பு அறிவியல் தொழில்நுட்பக் கண்காட்சி நடத்தப்படுகிறது. இவ்விழாவில், மும்பை ஹோமி பாபா தேசிய நிறுவனத்தின் துணைவேந்தர் யு. காமாட்சி முதலி, குஜராத் மாநில அரசின் அணை பாதுகாப்பு மறுஆய்வு குழு உறுப்பினர் ராம்ஜி சிங் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர். வைரவிழாவின் முக்கிய அம்சமாக முன்னாள் இயக்குநர்கள் நினைவாக இரண்டு இண்டர்ன்ஷிப் திட்டங்கள் தொடங்கப்படுகின்றன. மேலும் 3-டி பிரிண்டிங் தொழில்நுட்பத்தில் நாங்கள் கட்டியுள்ள மாதிரி கட்டிடமும் திறந்துவைக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது தலைமை விஞ்ஞானிகள் பாரி வள்ளல், சதீஷ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

செய்திப்பிரிவு

Last Updated : 10 Jun, 2025 04:58 AM

காஷ்மீர் செனாப் ரயில்வே மேம்பாலத்தின் உறுதி தன்மையை கண்காணிக்கும் பணி: சென்னை சிஎஸ்ஐஆர் - கட்டமைப்பு மையத்திடம் வருகிறது



சென்னை: உலகிலேயே மிகவும் உயரமான காஷ்மீர் செனாப் ரயில்வே மேம்பாலத்தின் உறுதித்தன்மையை கண்காணிக்கும் பணியை சென்னை சிஎஸ்ஐஆர் - கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் மேற்கொள்ள உள்ளது. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகும் என்று அம்மையத்தின் இயக்குநர் என்.ஆனந்தவல்லி தெரிவித்தார்.

சென்னை தரமணியில் இயங்கி வரும் சிஎஸ்ஐஆர் - கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் (எஸ்இஆர்சி) இன்று (ஜூன் 10) வைர விழாவை கொண்டாடுகிறது. இது தொடர்பாக அந்நிறுவனத்தின் இயக்குநர் என்.ஆனந்தவல்லி செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

கடந்த 1965-ம் ஆண்டு ஜூன் 10-ம் தேதி தொடங்கப்பட்ட சிஎஸ்ஐஆர் எஸ்இஆர்சி நிறுவனம் 60-வது ஆண்டு விழாவை கொண்டாடுகிறது. கட்டமைப்பு பொறியியல் துறையில் இங்கு ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துறையில் புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கட்டுமானத் துறையில் முக்கியப் பங்கு வகிக்கும் முறுக்கு கம்பி நாங்கள் உருவாக்கியதுதான் என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்கிறோம். கட்டமைப்பு துறையில் புதுமைகளை கண்டறிவதுடன் பாரம்பரிய கட்டிடங்களின் பராமரிப்புக்கான புதிய தொழில்நுட்பங்களையும் உருவாக்கி வருகிறோம்.

பாதுகாப்புத் துறை, அணுசக்தித் துறை, ரயில்வே, காற்றாலை, சூரிய ஒளி மின்சாரம் உள்ளிட்ட மரபுசாரா எரிசக்தித் துறை எனப் பல்வேறு துறைகளில் எங்கள் நிறுவனத்தின் பெரும் பங்களிப்பு உள்ளது. முப்பரிமாண அச்சு (3டி பிரின்டிங்), பயோ-இன்ஜினீயரிங், பழைய கட்டிடங்களை மறுசுழற்சி மூலம் பயன்படுத்தும் தொழில்நுட்பம் என பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

ராமேஸ்வரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள் பாம்பன் செங்குத்து தூக்கு ரயில் மேம்பால கட்டுமானப் பணியில் எங்கள் விஞ்ஞானிகளும் பங்காற்றியுள்ளனர். தண்டவாளத்தை சென்சார் முறையில் கண்காணிக்க ஆலோசனை வழங்கியுள்ளனர். அண்மையில் காஷ்மீரில் பிரதமரால் திறந்து வைக்கப்பட்ட உலகின் மிக உயரமான செனாப் ரயில் பாலத்தின் உறுதித்தன்மையை கண்காணிக்கும் பணியை எங்கள் நிறுவனத்திடம் ஒப்படைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

எங்கள் நிறுவனத்தின் வைர விழா செவ்வாய்க்கிழமை (இன்று) கொண்டாடப்படுகிறது. சாதனைகளை எடுத்துரைக்கும் வண்ணம் சிறப்பு அறிவியல் தொழில்நுட்பக் கண்காட்சி நடத்தப்படுகிறது. இவ்விழாவில், மும்பை ஹோமி பாபா தேசிய நிறுவனத்தின் துணைவேந்தர் யு.காமாட்சி முதலி, குஜராத் மாநில அரசின் அணை பாதுகாப்பு மறு ஆய்வுக் குழு உறுப்பினர் ராம்ஜி சிங் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர்.

வைர விழாவின் முக்கிய அம்சமாக முன்னாள் இயக்குநர்கள் நினைவாக 2 இன்டர்ன்ஷிப் திட்டங்கள் தொடங்கப்படுகின்றன. மேலும் 3-டி பிரின்டிங் தொழில்நுட்பத்தில் நாங்கள் கட்டியுள்ள மாதிரி கட்டிடமும் திறந்துவைக்கப்படுகிறது. இவ்வாறு ஆனந்தவல்லி கூறினார். பேட்டியின்போது தலைமை விஞ்ஞானிகள் பாரி வள்ளல், சதீஷ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

CSIR-SERC Diamond Jubilee Celebrations to be held on June 10

CHENNAI

The Diamond Jubilee celebrations of CSIR-Structural Engineering Research Centre (SERC) to be held on today (10.06.2025). A curtain raiser press conference was held yesterday at the CSIR campus in Taramani, Chennai.

Dr. N. Anandavalli, Director of CSIR-SERC, addressed the gathering and explained about the 60th-anniversary Diamond Jubilee celebrations to be held tomorrow. She highlighted the achievements and social contributions of the CSIR-Structural Engineering Research Centre over the last six decades. She also quoted how their research is structured to apply science in a way that benefits society.

She further said that their achievements, including the invention and production of twisted steel bars, the construction of the Matrimandir in Puducherry, fly ash technology, Tower Testing Station, CSIR-SERC's contribution to the design of the New Pamban Bridge, and the Structural Engineering Research Centre's contributions to various sectors including the Railway, Defence, Science and environment and Interdisciplinary researches.

She informed that a Memorandum of Understanding (MoU) has recently been signed for research on the Chenab Bridge, which was opened in Jammu and Kashmir recently. Dr. N. Anandavalli also stated that two new training programs will be introduced during the event today.

Furthermore, Professor Kamachi Mudali, Vice-Chancellor of Homi Bhabha National Institute, Mumbai, and Dr. Ramji Singh, member of the Dam Safety Review Committee of the Government of Gujarat, will participate as special guests at the diamond jubilee celebrations today.

THANGAM Online

சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் வைர விழா கொண்டாட்டங்கள்

June 10, 2025

சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் வைர விழா கொண்டாட்டங்கள் நடைபெற உள்ளன. இது குறித்த செய்தியாளர் சந்திப்பு சென்னை தரமணியில் உள்ள சிஎஸ்ஐஆர் வளாகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய சிஎஸ்ஐஆர்-கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் டாக்டர் என். ஆனந்தவல்லி, நடைபெறவுள்ள 60-வது ஆண்டு வைர விழா கொண்டாட்டங்கள் குறித்து விளக்கினார். கடந்த 60 ஆண்டு கால கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் சாதனைகள் மற்றும் சமூக பங்களிப்பு குறித்து அவர் எடுத்துரைத்தார். அறிவியல் கண்டுபிடிப்புகள் சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் தங்களது ஆராய்ச்சிகள் அமைந்துள்ளன என்று அவர் கூறினார். தங்களது சாதனைகளான முறுக்கு கம்பி கண்டுபிடிப்பு மற்றும் தயாரிப்பு, புதுவையில் உள்ள மாத்ரிமந்திர் உருவாக்கம், உலைச் சாம்பல் தொழில்நுட்பம், புதிய பாம்பன் ரயில் பால வடிவமைப்பில் தங்களது பங்களிப்பு, மேலும் ரயில்வே துறை, பாதுகாப்பு துறை, அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் பங்களிப்பு குறித்தும் அவர் எடுத்துரைத்தார். சமீபத்தில் ஜம்மு காஷ்மீரில் திறக்கப்பட்ட செனாப் பாலத்தில் ஆராய்ச்சி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது குறித்தும் அவர் கூறினார். நாளை நடைபெற உள்ள நிகழ்ச்சியில் இரண்டு புதிய பயிற்சி திட்டங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும் இயக்குநர் டாக்டர் என். ஆனந்தவல்லி கூறினார்.

Special Service and Features

CSIR-SERC Diamond Jubilee Celebrations 2025

Posted On: 10 JUN 2025 8:19PM by PIB Chennai

CSIR-Structural Engineering Research Centre (CSIR-SERC), Chennai, celebrated its Diamond Jubilee (1965-2025), on 10 June 2025. The 60 glorious years of shaping infrastructure and service to the nation. As a part of the Diamond Jubilee celebrations, a meet with stakeholders Stakeholder Connect - was organized on 10 June 2025 at 9 AM and the CSIR-SERC Diamond Jubilee Celebration function was held in the afternoon.

Dr. V. Govindaraj, Head (R&D), ECC Division, L&T Ltd., Chennai was the chief guest of the Stakeholder Connect event. Around 50 stakeholders from across the industry participated in the event. The event began with an invocation and lighting of lamp by the dignitaries. Dr. N. Anandavalli, Director, CSIR-SERC and Coordinating Director, CSIR Madras Complex (CMC), welcomed the stakeholders from the industry and delivered the welcome address. In her address, she said that this event shall provide a road map for CSIR-SERC's future research focus. She also made a detailed presentation – *60 years | One Spirit* – in which she briefed on the genesis of CSIR-SERC from Roorkee to Chennai, unique and significant contributions of CSIR-SERC to the nation, society and to the field of civil and structural engineering since 1965, 60 years of legacy of CSIR-SERC, demonstrative structures at the campus, current research focus, thrust areas and laboratories of CSIR-SERC, recent scientific contributions and future focus areas.

Dr. P.S. Ambily, Senior Principal Scientist, CSIR-SERC, introduced the chief guest to the audience. Dr. Govindaraj in his address, remembered the visionary leaders of CSIR and CSIR-SERC, who built the CSIR laboratories across the nation. He credited CSIR-SERC for its various technological achievements and praised its ground-breaking and cutting-edge technologies such as ferrocement, precast concrete sleepers, high strength deformed bars, etc., that contributed to the national development in a huge way. He said that the research activities at CSIR-SERC is on par with the reputed research institutes across the world and shared the long association of L&T with CSIR-SERC. He said that various element level and micro level problems exist in the construction industry which needs to be addressed and requested CSIR-SERC to take up such issues. Highlighting the difficulty in taking new civil engineering technologies from laboratory to the field, which requires multiple approvals, he said that enormous hard work and resilience is required to achieve it and requested the industry, academia and research institutes to work hand-in-hand to successfully implement the new technologies developed. Talking about the significance of fire resistance studies and digital evolution, he requested CSIR-SERC to set up new labs with focus on utilization of digital technologies to the industry and on fire resistance studies.

The chief guest's lecture was followed by the inauguration of exhibition on the occasion of Diamond Jubilee. It was then followed by the presentation by scientists on the expertise and service rendered on six thrust areas of CSIR-SERC, viz, Structural Health Monitoring & Life Extension, Energy Infrastructure, Disaster Mitigation, Advanced Materials for Sustainable Structures, Special & Multifunctional Structures, and Offshore Structures. The stakeholder feedback and the panel discussions followed. Dr. P. Harikrishna, Chief Scientist, CSIR-SERC, proposed vote of thanks.

The CSIR-SERC Diamond Jubilee function started at 2 PM. Prof. U. Kamachi Mudali, Vice Chancellor, Homi Bhabha National Institute, Mumbai, was the Chief Guest and Dr. Ramji Singh, Member, Dam Safety Review Panel, Govt. of Gujarat, was the Guest of Honour. Dr. N. Anandavalli, Director, CSIR-SERC and Coordinating Director, CMC, presided over the function and delivered welcome address. In her address, she remembered the visionary leaders of CSIR-SERC and the people who built this great institution and said that it is the collective responsibility of the present team to continue excelling and pass on the torch to the future generation. A special video on the milestones, memories and moments of pride of sixty glorious years of CSIR-SERC was played before the audience.

The presentation on the glimpse of activities on the occasion of Diamond Jubilee was given by Dr. J Prabakar, Chief Scientist, CSIR-SERC. Dr. J. Rajasankar, Chief Scientist, CSIR-SERC, introduced the chief guest Prof. Kamachi Mudali to the audience. Prof. Kamachi Mudali delivered the Prof. G.S. Ramaswamy Memorial Lecture on *Relevance of Corrosion towards Integrity and Management of Structures*. In his lecture, he spoke on economy and growth of Indian industry, sustainable development goals and Agenda 2030, sustainable development – relevance to materials & corrosion, impact of corrosion on industry and public, holistic corrosion management for integrity of structures, potential areas of R&D towards corrosion control, degradation monitoring and evaluation technologies for structures, solutions for mitigating corrosion of concrete structures, national policy on corrosion control and management (NPCC&M), and national gains expected from adopting NPCC&M. He highlighted that colossal corrosion damage is a big concern with respect to assets and structures for India, and it needs immediate care through a national policy and an institution.

Dr. S. Parivallal, Chief Scientist and Advisor (M), CSIR-SERC, introduced the Guest of Honour, Dr. Ramji Singh to the audience. In his address, Dr. Ramji Singh spoke on the significance of dam rehabilitation and maintenance, problems faced by them during the process and said that CSIR-SERC has the ability to provide a comprehensive solution to the various problems in the area of dam rehabilitation and maintenance. He said, they are already collaborating with CSIR-SERC and desired to work together in more areas.

Prof. Santosh Kapuria, Former Director, CSIR-SERC, virtually inaugurated the *ConStruct 3D PrintPod – 3D Printed Building* done by CSIR-SERC. Concrete 3D printing (3DCP) is emerging as a transformative technology within the construction sector, facilitating a convergence of digital design, advanced materials engineering and robotic automation. CSIR-SERC has demonstrated the practical application of 3DCP by constructing a ConStruct 3D PrintPod, which opens up new possibilities for resilient, resource-efficient, and customized built environments, especially in applications requiring rapid deployment, such as disaster relief housing, remote site construction and smart urban infrastructure.

Prof. Kamachi Mudali, released the *Coffee Table Book* compiled on the occasion of Diamond Jubilee. Dr. Ramji Singh, released the *60 technologies book* that highlights the 60 significant technologies of CSIR-SERC. The former directors and around 80 retired staff members of CSIR-SERC were felicitated during the event, in gratitude for their service. A presentation on the former directors were shown for the audience, which was followed by the honouring of former directors and retirees by Director, CSIR-SERC.

As a part of the function, AcSIR Science Club was inaugurated and a video on the same was played. As a part of CSIR-SERC Diamond Jubilee celebrations, a quiz competition was organised amongst students of engineering colleges - exclusively for *civil engineering students* - on 14 May 2025. The prizes were distributed to prize winners during the function by the dignitaries. As part of Diamond Jubilee celebrations, a poster preparation competition was organized for the staff members of CSIR-SERC on the theme *CSIR-SERC@2040*. Prizes were also distributed for the winners during the function. Shri E. Mahesh Kumar, Controller of Stores & Purchase, CSIR-SERC, proposed vote of thanks.

The physical inauguration of 3D printed building followed. The battery-operated vehicle meant for transporting staff within the campus, was also flagged off.

***

AD/DL

(Release ID: 2135487)

சிஎஸ்ஐஆர்- கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் வைர விழா கொண்டாட்டங்கள்

Posted On: 10 JUN 2025 8:19PM by PIB Chennai

சென்னையிலுள்ள சிஎஸ்ஐஆர்-கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் (சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி), ஜூன் 10, 2025 அன்று அதன் வைர விழாவைக் (1965-2025) கொண்டாடியது. வைர விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, பங்குதாரர்கள் உடனான ஒரு சந்திப்பு ஜூன் 10, 2025 அன்று காலை 9 மணிக்கு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி வைர விழா கொண்டாட்ட நிகழ்ச்சி பிற்பகலில் நடைபெற்றது.

வைர விழா கொண்டாட்ட நிகழ்ச்சியில் மும்பையில் உள்ள ஹோமி பாபா தேசிய நிறுவனத்தின் துணைவேந்தர் பேராசிரியர் யு. காமாச்சி முதலி தலைமை விருந்தினராகவும், குஜராத் அரசின் அணை பாதுகாப்பு மறுஆய்வுக் குழுவின் உறுப்பினர் டாக்டர் ராம்ஜி சிங் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி இயக்குநரும் சிஎஸ்ஐஆர் சென்னை வளாக ஒருங்கிணைப்பு இயக்குநருமான டாக்டர் என். ஆனந்தவல்லி விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

பேராசிரியர் காமாச்சி முதலி, கட்டமைப்புகளின் ஒருமைப்பாடு மற்றும் மேலாண்மையில் அரிப்பின் தொடர்பு குறித்த பேராசிரியர் ஜி.எஸ். ராமசாமி நினைவு சொற்பொழிவை நிகழ்த்தினார். தனது சொற்பொழிவில், இந்திய தொழில்துறையின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சி, நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் 2030 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம், நிலையான வளர்ச்சி - தொழில் மற்றும் பொதுமக்கல் மீது அரிப்பின் தாக்கம், கட்டமைப்புகளின் ஒருமைப்பாட்டிற்கான முழுமையான அரிப்பு மேலாண்மை, அரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் சாத்தியமான பகுதிகள், கட்டமைப்புகளுக்கான சீரழிவு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு தொழில்நுட்பங்கள், கான்கிரீட் கட்டமைப்புகளின் அரிப்பைக் குறைப்பதற்கான தீர்வுகள், அரிப்பு கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை குறித்த தேசிய கொள்கை மற்றும் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்வதன் மூலம் எதிர்பார்க்கப்படும் தேசிய ஆதாயங்கள் குறித்து அவர் பேசினார். இந்தியாவின் சொத்துக்கள் மற்றும் கட்டமைப்புகளைப் பொறுத்தவரை மிகப்பெரிய அரிப்பு சேதம் ஒரு பெரிய கவலையாக உள்ளது என்றும், அதற்கு ஒரு தேசிய கொள்கை மற்றும் ஒரு நிறுவனம் மூலம் உடனடி கவனிப்பு தேவை என்றும் அவர் எடுத்துரைத்தார்.

டாக்டர் ராம்ஜி சிங் தனது உரையில், அணை மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்பின் முக்கியத்துவம், இந்தச் செயல்பாட்டின் போது எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் குறித்துப் பேசினார். மேலும் அணை மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்புத் துறையில் உள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒரு விரிவான தீர்வை வழங்கும் திறனை சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி கொண்டுள்ளது என்றும் கூறினார். அவர்கள் ஏற்கனவே சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி உடன் இணைந்து பணியாற்றி வருவதாகவும், மேலும் பல பகுதிகளில் சேர்ந்து பணியாற்ற விரும்புவதாகவும் அவர் கூறினார்.

சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சியின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் சந்தோஷ் கபூரியா, சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி-ஆல் உருவாக்கப்பட்ட கட்டுமான 3டி பிரிண்ட்பாட் - 3டி அச்சிடப்பட்ட கட்டிடத்தை மெய்நிகர் மூலம் திறந்து வைத்தார். பேராசிரியர் காமாச்சி முதலி, வைர விழாவை முன்னிட்டு தொகுக்கப்பட்ட காபி டேபிள் புத்தகத்தை வெளியிட்டார். டாக்டர் ராம்ஜி சிங், சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சியின் 60 குறிப்பிடத்தக்க தொழில்நுட்பங்களை எடுத்துக்காட்டும் '60 தொழில்நுட்பங்கள்' புத்தகத்தை வெளியிட்டார்.

***

AD/RB/DL

(Release ID: 2135507)
Read this release in: English

‘கான்கிரீட் கட்டடங்கள் சிதிலமடைவதை தடுக்க நவீன தொழில்நுட்பங்களை கண்டறிய வேண்டும்’

சென்னை, ஜூன் 10: கான்கிரீட் கட்டடங்கள் எளிதில் சிதிலமடைவதைத் தடுப்பதற்கு நவீன தொழில்நுட்பங்களைக் கண்டறிய வேண்டும் என மும்பை ஹோமி பாபா தேசிய நிறுவனத்தின் துணைத் தலைவர் யு.காமாட்சி முதலி தெரிவித்தார்.

சென்னை தரமணியில் இயங்கி வரும் சிஎஸ்ஐஆர் கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தின் (எஸ்இஆர்சி) வைர விழா அதன் வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விழாவில் சிறப்பு அழைப்பாளராக பேராசிரியர் யு.காமாட்சி முதலி பங்கேற்றுப் பேசியதாவது:

இந்திய பொருளாதாரத்தின் நிலையான வளர்ச்சிக்கு கட்டுமானத் துறை முக்கியப் பங்காற்றி வருகிறது. கட்டுமானத் துறையில் பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் வளர்ந்து வந்தாலும், கட்டடங்கள் விரைவில் சிதிலமடைவதை தடுப்பதற்கான புதிய தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படாமலேயே உள்ளது. இதனால், குறிப்பிட்ட காலத்துக்குள் ஒரு கட்டடம் தனது ஆயுளை இழக்கிறது. இதனால், கான்கிரீட் கட்டடங்கள் தேசமடைவதை தடுப்பதற்கான புதிய நவீன தொழில்நுட்பங்களைக் கண்டறிய வேண்டும் என்றார் அவர்.

சென்னையிலுள்ள சிஎஸ்ஐஆர்–கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையத்தில் (சிஎஸ்ஐஆர்–எஸ்இஆர்சி) 3டி பிரிண்ட்பாட் தொழில்நுட்பத்தில் கட்டப்பட்ட கட்டட திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற சிஎஸ்ஐஆர்–எஸ்இஆர்சியின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் சந்தோஷ் கபூரியா. உடன், மும்பையில் உள்ள ஹோமி பாபா தேசிய நிறுவனத்தின் துணைவேந்தர் பேராசிரியர் யு. காமாட்சி முதலி , குஜராத் அரசின் அணைப் பாதுகாப்பு மறுஆய்வுக் குழுவின் உறுப்பினர் டாக்டர் ராம்ஜி சிங், சிஎஸ்ஐஆர் சென்னை வளாக ஒருங்கிணைப்பு இயக்குநர் என்.ஆனந்தவல்லி.

தொடர்ந்து, குஜராத் மாநில அரசின் அணைப் பாதுகாப்பு மறு ஆய்வுக் குழு உறுப்பினர் ராம்ஜி சிங் பேசும்போது, அணைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய கட்டுமானப் பொறியியல் துறையினர் அந்த அணைகளில் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு, அவற்றைப் பராமரிக்க வேண்டும் என்றார் அவர்.

முன்னதாக, மைய வளாகத்தில் சிஎஸ்ஐஆர்–எஸ்இஆர்சி–ஆல், ‘3டி’ பிரிண்ட்பாட் தொழில்நுட்பத்தில் கட்டப்பட்ட கட்டடம், காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் சிஎஸ்ஐஆர்-எஸ்இஆர்சி-யின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் சந்தோஷ் கபூரியா, சிஎஸ்ஐஆர் சென்னை வளாக ஒருங்கிணைப்பு இயக்குநர் என். ஆனந்தவல்லி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

CSIR-SERC celebrates Diamond Jubilee, showcases 60 years of structural innovation

UPDATED : ஜூன் 10, 2025 12:00 AM
ADDED : ஜூன் 10, 2025 11:54 PM

FOLLOW ON Google News
Share Focus
நிறம் மற்றும் எழுத்துரு அளவு மாற்ற

Chennai: The CSIR-Structural Engineering Research Centre (CSIR-SERC), Chennai, marked its Diamond Jubilee on June 10, celebrating 60 years of pioneering structural engineering research and contributions to national infrastructure development.

The day-long event began with a "Stakeholder Connect" meet, inaugurated by Dr. V. Govindaraj, Head (R&D), L&T ECC Division. Addressing over 50 industry participants, Dr. N. Anandavalli, Director, CSIR-SERC, highlighted the institution's legacy and future research directions. Her presentation, 60 Years | One Spirit, traced the Centre's journey from Roorkee to Chennai and its significant technological advancements.

Dr. Govindaraj lauded CSIR-SERC's role in introducing cutting-edge technologies like ferrocement and high-strength deformed bars, calling for deeper academia-industry collaboration and enhanced focus on digital and fire-resistance research.

An exhibition and technical presentations followed, showcasing six thrust areas of the Centre, including disaster mitigation and offshore structures. Dr. P. Harikrishna delivered the vote of thanks.

In the afternoon, the main Diamond Jubilee celebration commenced, graced by Prof. U. Kamachi Mudali, Vice Chancellor, HBNI, and Dr. Ramji Singh, Dam Safety Review Panel member. Prof. Mudali delivered the Prof. G.S. Ramaswamy Memorial Lecture on structural corrosion, emphasizing the need for a national policy on corrosion management.

A highlight of the event was the virtual inauguration of the “ConStruct 3D PrintPod,” a 3D-printed concrete building, and the release of two publications — a Coffee Table Book and a compendium of 60 CSIR-SERC technologies. Former directors and 80 retired staff were felicitated.

Additional festivities included the inauguration of the AcSIR Science Club, prize distributions for student and staff competitions, and the launch of an eco-friendly battery vehicle for campus transport.

The celebrations concluded with the physical inauguration of the 3D-printed structure, symbolizing CSIR-SERC's forward-looking vision for 2040.